தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 6] MADRAS:—SUNDAY FEBRUARY, 6, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

தெய்வச்செயல்.	வாதப்பிரதிவாதம்.
பிர்மவித்தியா.	வர்த்தமானசங்கிரகம்.
மானுஷீகத்துவம்.	நோட்டீசு.

தெய்வச்செயல். 308

(17-வது பக்கத்தொடர்ச்சி.)

ங. கிறீஸ்துமதம்: இம்மதம், சுமார் 6000 - வருடங்களுக்குமுன் பராபரன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினானென்றும், சாத்தானின் ஏவுதலால் மனிதன் பராபரனது கட்டளைக்குமீறி யாவுஞ்செய்தானென்றும், அப்பாவம் நிவர்த்தியாகும்பொருட்டு பராபரனே சுமார் 4000 - வருடங்களுக்குப்பின் மானுட அவதாரமெடுத்துகிறீஸ்துவெனும்பெயர்வகித்து முப்பதாவது வயதுதொடங்கி 'தன்னை நம்பினவருக்கு நித்தியசுவர்க்கமென்றும், தன்னைநம்பாதவருக்கு நித்திய நரகமென்றும்' பிரசங்கித்து முப்பத்துமூன்றும்வயதில் இராஜாங்கத்தாரால் இராஜவிரோதியாகக் குற்றம் பாரிக்கப்பட்டு, சிலுவையிலறைபட்டு இறந்ததாகவும், இவ்வாறு மரித்ததேவன் புதைக்கப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்து ஓர்மண்டலம் பூமியின்மீது வசித்து பின்னர் ஓர்மலையினுச்சியினின்று வானத்திற்கேறிப் போயினனென்றும், அவனை நம்பினவரே பாவநாசத்தைப்பெற்று பரலோகப் பிராப்தியடைவர் என்றும் கூறும்.

தொழிலில்லாதவன் துரும்பைக்கிள்ளுவதுபோல், யாதொன்றுஞ்செய்யாதிருந்த பராபரன், குழந்தையொன்றை கிணற்றின் சுவர்மீது நிறுத்தி குழந்தையைநோக்கி நீ யிதில் விழுந்தால் சாவாய் என்று அக்குழந்தை யுணராவண்ணம் சொல்லிதூரத்தேபோயொளித்திருந்து பிறகு அக்குழந்தை தற்செயலாய் கிணற்றில் விழவும் அதன்முன்வந்து நின்று விழவேண்டாமென்று சொல்லினேனே நீ யச்சொற்றவறி விழுந்தமையால் தண்டிக்கப்படுவாய் அஃது வேண்டாயேல் என்னை யுன் இரக்ஷகன் எனறு நினையென்று அக்கிணற்றிலேயே அக்குழந்தையை விட்டுவிடுவானையொத்து, சுமார் 6000 - வருடங்களுக்குமுன் தனக்கோர் எண்ணம் எழ வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்து ஓர் சிங்காரவனத்து ஓர் புருஷனையும் பெண்ணையும் வைத்து துன்பமென்பது இன்னதென வறியாத அன்னோரை ஓர் தருவின் கனிகளைச்சுட்டி இவற்றினை நீங்கள் தின்னன்மின், தின்னின் நீங்கள் துயருறுவீர்கள் என்றும் சொல்லித்தூரத்தே யொளித்திருந்து தனக்கு பகைவனாகிய பசாசானவன் அவர்களைப் பாவத்திற் காளாக்கியதைக் கண்டிருந்து பகைவனாகிய பசாசு பலங்கொண்டதே செயங்கொண்டதே என்றுதுக்கித்தும், ஏன் இப்பிரபஞ்சத்தை யியற்றினேனென்று சிந்தித்தும், தான் செய்த குற்றத்திற்குத்தானே யனுபவிக்கவேண்டுமென்று உடன்பட்டும், தான் செய்த குற்றத்தை பிறர்மேல் ஏற்றுவாரையொத்து அவ்விருவர்முன்சென்று நீங்கள் பாவிகளாய்விட்டபடியால் துயருறுவீர்களென்றும் அதற்குப் பரிகாரம் தான் எடுக்கவேண்டியிருக்கும் கிறீஸ்து அவதாரத்தில்தனதுதேகத்தினின்று சிந்தும் உதிரமென்று சொல்ல சுமார் 4000 வருடங்களுக்குப்பின் அவதாரம் புரிந்து தமது முப்பத்துமூன்றும் வயதில் சிலுவையில் அறைபட்டு புதைபட்டுமீண்டும் வெளிப்பட்டு வெளியினுட் பிரவேசித்தார் என்று சொல்லும் மதமும் மதமா? ஏசுவைநம்பவேண்டுமென்பதும்நலமா? அல்ல, அல்ல, எக்காலும் நலமல்ல.

ஆத்திகம் எனப் பொதுப்பெயர்வகித்துள்ள இம்மதங்களும் இன்னும் வுள்ள பற்பல மதங்களும் அறியாமையையே தெய்வமாகவும் அறியாமையால் நிகழும் சம்பவங்களையே அத்தெய்வத்தின் செயலென்றும் உதகரிக்கும். ஆனால் இதுவரையிலும் தெய்வச்செயல் என்று நம்பிவரப்பட்ட இடியின் ஒலியையும், மின்னலின் ஒளியையும் தேகத்தின்வலிவு மெலிவினையும் பூதகிருத்தியங்களென விவேகிகள் ஆராய்ந்து அறிந்திருப்ப, ஆத்திகாள் தெய்வச்செயல் தெய்வச்செயல் என நாத்தழும்பேற இனி நவிலுவதிற் பிரயோசனமில்லை. இனி இவர் பிரயோசனத்தையடைய விரும்புவரேல் சம்பவாதிகளுக்கு காரணம் தெரியாக்கால் தெய்வச்செயலென நவிலாமல் காரண காரிய விசாரணையில் மனதைச் செலுத்துவாராக.

D.

பிர்மவித்தியா.

நாம் தருக்கசாஸ்திரம் ஒன்றையே படித்தோமென்றும் ஜீவனது சொரூபத்தைப்பற்றிய நூற்களை வாசிக்கவில்லையென்றும் படித்திருப்பின் ஜீவனது சொரூபமாகிய அறிவு பொருளென்றுவது குணமென்றுவது துணிவோம் என்றும நமது சாஸ்திரியார் சொல்கின்றனர். நாம் ஜீவனது இயல்பை அறிந்துள்ளோமென்றும் நமது நண்பர் அறிந்துள்ளாரென்றும் எங்கள் இருவர் வாதத்தையும் வாசிக்கும் அபிமானமென்னும் அந்தகாரத்தைவிட்டு வெளிவந்த விவேகிகள் உணர்வார்களாதலால் நாம் அளந்ததையே அளப்பதில் யாதொரு பயனுமில்லை.

விவேகிகளே! "உயிர் என்பது இச்சரீரத்தில் நிறைந்திருக்கும் ஓர்வகை வாயு, அதாவது—உயிர் என்பது சரீரத்தில் நிறைந்ததும் வாயுக்களின் பலபகுப்புகளில ஓர்வகையிற் சேர்ந்த வாயு" வும் என்று நமதுபிரியர் கூறுகின்றார். இவர் பிராணன் அல்லது உயிர் என்பது ஓர்வகை வாயுவென்றும், இவ்வாயு பலவிடங்களிற் சென்று பலவேலைகளைச் செய்து அனேக தொழிற்பெயரைப்பெற்றுள்ளது என்றும், அப்பெயர்கள் பிராணன அபானன் வியானன்முதலியன வென்றும் கூறியுள்ளமையால் வாயு ஒன்றேயென்றும் அது தேகத்திற் பலவிடங்களிற் சென்று பலதொழில்களைச் செய்கின்றதென்றும் ஆதலால் அது பெயர்களைப்பெற்றுள்ளதென்றும் நமது சாத்திரியார் எழுதியுள்ளமையாலும் அவ்வாயுவே பிராணன் என்றமையாலும் அவ்வாயுத்தானங்களில் ஒன்றாகிய அபானத்தினிடமாக அது வெளிகாணும்போது பிராணன் அல்லது அதிற்கொஞ்சம்பாகம் வெளிகாணவேண்டுமன்றா? ஆதலாற்றான் அபானவாயு வெளிகாணும்போது எவ்வளவு பிராணன் குறையுமென்று கேட்டோம். இது பரிகாசக் கேள்வியா கேட்கத்தக்க கேள்வியா விவேகிகளே! பாருங்கள் "எவ்வளவு அபானவாயு வெளிசெல்கின்றதோ அவ்வளவுவாயு புறத்திலிருந்து உள்நுழைகின்ற" தென்றார். அப்போது வாயுவாகிய பிராணனுக்கு கூட்டங்குறைவு உண்டென்றும் அது தேகத்திற்குப்புறத்திலும்உண்டென்றும்ஆகின்றதன்றா! தேகத்திற்குபுறத்திலும் பிராணன் உண்டென்பது இவருக்குஉடன்பாடுதானா? உடன்பாடேல் "உயிரென்பதுஇச்சரீரத்திலுள்ள ஓர்வகைவாயு" என்றுசொன்ன இவர் வசனத்தில் அதிவியாப்திதோஷம் உண்டாகின்ற தல்லவா? அல்லாமலும் பிராணவாயு 12 அங்குலவேகமுடையதென்று கூறிய இப்புத்திமான் அதன்காலவரையறையைக் குறிக்காதவிடத்து அதை ருசுப்படுத்துந் திராணி இவருக்கில்லையென்றேனும், அவ்வுரை வெற்றுரையென்றேனும் சந்தேகிக்க நேருமன்றா?

அப்படிச் சமயம் நேரும்வழி, இவர்கேட்ட (வாயுவைத் தண்ணீராக்கலும் தண்ணீரைத் திரும்ப வாயுவாக்கலும் ஆகிய) பரீக்ஷை இவர்கொண்ட கருவிகளின்றி வெவ்வேறுவிதமாயே நமது முன்னோரெழுதிய அரிய நூற்களால் எடுத்துக் காட்டவல்லவர் அநேகருண்டு என்று நமது சாஸ்திரியார் எழுதுகின்றார். அதைப்பற்றி விவாதம்நேரிட்ட இச்சமயத்தையன்றி மற்றெச்சமயத்தைச் சாஸ்திரியார் எதிர் பார்த்திருக்கின்றாரோ தெரியவில்லை. இங்கிலீஷ்பாஷையில் ஏற்பட்டிருக்கிற பரிபாஷா நாமங்களுக்கு முன்னோரெழுதிய புஸ்தகங்களில் பெயர்களுண்டில்லையென்பது குறித்துக்கேட்டால் விளங்கமறுமொழி கிடைக்கும்" என்கிறார். Luis Essays on human understanding, என்னும் புத்தகத்தில் முதல்பக்கத்தில் சேர்த்திருக்கும் சந்ததி குறிக்குஞ் சக்கரத்தைப்போன்ற கோடிட்டு

எழுதப்பட்டிருக்கும் பெயர்களுக்கெல்லாம் சமஸ்கிருத பெயர்களெடுத்துக்காட்டின் போதும்.

“ஜீவன் அறிவினிடம் என்று சொன்னவிஷயத்தைமாத்திரம் கவனித்தாரேயொழிய அதன்சொரூப அறிவிற்கும்வெளியறிவிற்கும் நாம் கூறிய பேதத்தைச் சற்றுக்கவனித்து எழுத அவருக்கு அவகாசங்கிடைக்கவில்லைபோலும்” என்று நமது சாஸ்திரியார் எழுதுகின்றார். இச்சாஸ்திரியார் ஜீவனுக்கு அறிவை இடமாக்கியதுங் கவனித்தோம், திரும்ப அவ்வறிவிற்கு ஜீவனை யிடமாக்கியதுங் கவனித்தோம். கவனித்தசனுற்றான் அவற்றிலுள்ள பரஸ்பர விரோதத்தை ஆசங்கிக்க நேர்ந்தது. **பொருள்** என்பது நாம் படித்த தருக்கசாஸ்திரத்திலுள்ள **பதார்த்தம்** என்கிற சொல்லுக்கொத்ததென்றார். பொருளுக்கும் பதார்த்தத்திற்கும் இவர் படித்த தருக்கநூலிற் பேதமில்லையேல் பதார்த்தம் பொருளாகும்! பதார்த்தத்தில் திரவிய முதலிய ஒன்பதும் அடங்குமே, பொருளில் அடங்குமா? அடங்காதேல் பதார்த்தம் பொருளுக்குப் பிரதிபதமாமா? இதைச் சாஸ்திரியாரும் பிறரும் யோசிக்கவேண்டியது.

நாம் இவ்வாதத்தில் நமது நண்பருக்குமிஞ்சி யாதொன்றும் நிந்தனா வசனங்கள் வழங்கவில்லை. ஆபாசங்களைக் கண்ட வழி அவற்றை எளிதம் செய்கின்றோம்.

மானுஷீகத்துவம் யாது?

மானுஷீகத்துவமென்பது மனிதருக்கு நியதமாயிருக்குந் தன்மை என்று சிலர் சொல்லுகின்றார்கள். இது காலதேச சங்கத்தளவினதாக விருக்குமென்பது பின்னைய விஷயங்களால் நன்குவிளங்கும். காலமென்பது எல்லாக்காரியங்களுக்கு நியதமாய் ஒன்றாய் வியாபகமாயிருப்பதாதலால், அதன்கண் ணிகழும் சம்பவாதிகளை முன்னிட்டன்றி அளவிடற்பாலதன்று. வானம் வறண்டு மழைபெய்யாது பஞ்சமென்பது மேலிட்ட காலத்து,வற்றாச்சமுத்திரம்போல குறைவறவாழ்ந்து ஈகையுமிதக்கமும் இன்துணையாகக்கொண்ட வேளாந்தன்மையர், தத்தம் பெருந்தன்மையைப் பாராட்டாமலும், மேன்மையை மதிக்காமலும்,குடிப்பிறப்பைக்குறிகொள்ளாமலும் கஞ்சிகஞ்சியென்று நெஞ்சுலர்ந்து வீதி விடங்கராய் வேற்றூர்புக்ககாலத்து அவர்கள் முன் சம்பத்திலிருந்தபோது உண்டாயிருந்த நடையுடை பாவனைகளும் உதாரத்துவமும் விகற்பப்படாமல் என்றும் ஒருபடித்தாகவே இருக்குமென்பதும் இராவென்பதும் நாம் பஞ்சகாலங்கடோறும் நெஞ்சாரக்கண்டிருக்கின்றோம். ஒரு தேசத்திலுள்ளவர்களுடைய நிறமும் சொரூபமும் குணமும் ஒழுக்கமும் தன்மையும் மற்றெல்லாத் தேசத்தவர்க்கும் ஒத்திருத்தல்கூடாது. நமது தேசத்திலுள்ளவர்கள் அற்பவாழ்நாளுடையவர்களாகவும், நூறுவயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். சுவீடன், நார்வே முதலிய தேசாந்தரங்களிலுள்ளவர்களோ விசேஷ வாழ்நாளுடையவர்களாகவும், சிலர் நூறு, நூற்றிற்கு மேற்பட்டிருப்பதல்லாமல் ஏகதேசம் நூற்றறுபது வயதளவுமிருக்கிறார்கள், சிவப்பு வெண்மை கறுப்பு செவ்வந்தி சாம்பர் முதலிய நிறங்களும், இரண்டடி முதல் எட்டடி உயரமும் வட்டமுகமும் சப்பைமூக்கும் குழிந்ததாடையும் கொள்ளிக்கண்ணும் மிருகாதிகளைப்போல தேகமுற்றும் உரோமமும் இன்னும் பற்பலவிதமான விகற்பரூபமுடைய மனிதர்களை தேசாந்தரங்களிற் கண்ட கப்பல்யாத்திரிகள் சரித்திரங்களிற் சொல்லியிருக்கிறார்கள். சிற்சில தேசங்களில் புல்முதலிய கந்தமூலங்கள் தெரிசனத்திற்குங் கிட்டுவ தருமையாதலால, அங்குள்ளவர்கள் சதாகாலமும் மாமிசாதிகளையே புசிக்கின்றார்கள். சில தேசத்தவர் மாமிசங்கிட்டுவது அருமையாயிருத்தலின் சதாகாலமுங்கந்தமூலாதிகளையே புசிக்கின்றார்கள். சிலர் இரண்டும் புசிக்கின்றார்கள். சிலர் மனிதரையும் புசிக்கின்றார்கள். இவர்களுடைய அறிவுங் குணமும் மதமும் இவ்வாறே பற்பலவாய் வேறுபட்டிருக்கின்றன. சிலர் சூரியனையும் சிலர் சந்திரனையும் சிலர் அக்கினியையும் சிலர் சமுத்திரத்தையும் சிலர் நதியையும் சிலர் மச்சங்களையும் மிருகங்களையும் மரங்களையும் பக்ஷிகளையும் மலைகளையும் ஜீவஜெந்துக்களையும் சிலர் மனோகற்பிதாபாவங்களையும் கடவுளென வணங்குகின்றார்கள். சிலர் கடவுளொன்னும் எண்ணமும்ஆன்மாவென்னும் எண்ணமும் அணுத்துணையும் அற்பமேனும்இல்லாமல் காலங்கழிக்கின்றார்கள். சில தேசத்தவர் தமக்கு உற்சாகமுள்ளபோது தங்கடவுளாகிய செய்யுருவத்திற்கு தாமுண்ணும் உணவாதிகளைத் தூபங்காட்டி உபசரித்து பூசித்தும், தமக்கு விசனம் நேரிட்டபோது அவற்றைப் பிரம்புகொண்டடித்தும் வருகின்றார்கள். இவற்றை எல்லாம் உற்றுநோக்கி சித்தசமாதானத்தோடு பரியாலோசனை செய்யுங்கால், மானுஷீகத்துவமென்பது தேசங்களெங்கும் எக்காலத்தும் ஒரு தன்மைப்பட்டிருப்பதைக் காண்கின்றோமில்லையாதலால், இதன் காரணம் ஒன்றேயென எவ்வாறு நிச்சயித்தல்கூடும். இவ்வாறு பற்பல தேசாசார ஒழுங்குகளை சிந்தியாது விடினும் நமது தேசாசார ஒழுங்குகளேனும் பிரதமசந்ததிக்குப் பெருமிதப்படுகின்றதாவென்பதைப் பரியாலோசித்தல் வேண்டுமே. நம்முன்னோர் சில காலங்களுக்குமுன், பிள்ளையில்லாதிருந்தால் கங்காபவானிக்குப் பிரார்த்தனைசெய்தலும், பிள்ளைகள் பிறந்தால் தங்கள் பிரார்த்தனையைப் பூர்த்திசெய்ய வெண்ணி முதற்பிள்ளையை மனங்கூசாது கங்கையில் தூக்கிப்போடுதலும்,புருஷனிழந்தபெண் உடன்கட்டையேறுதலும், வீடு கட்டும்போதும் கிணறு தோண்டும்போதும் நரபலிகொடுத்தலும் வழக்கமன்றோ. சில பயிரிடுங்குடிகள் ‘மாரியார்பலி’ என்னும் ஒருவித கோரகிர்த்தியத்தைச் செய்தலும் உண்டே: இதில் ஒருவனைப்பற்றிப் பிடித்து அவனுக்கு மூன்று நாள் அல்லது பதினைந்துநாள் அவன் விரும்பி வேண்டிய போஜன பூஷணாதிகளெல்லாங்கொடுத்துப் பின் அவன் அவயவங்கள் முப்பத்திரண்டிலும் பதைபதைக்க கொஞ்சம் கொஞ்சம் அறுத்து, காளிபூசைசெய்தும் அவன் உதிரத்தைச் சோற்றுடன் கலந்து வயல்களிலிறைத்தும், கடையில் அவன் தேகத்தைச் சிந்துசிந்தாய்ச் சேதித்தும், அவ்வாறு சேதித்த மாமிசாதி எலும்புகளை ஒவ்வொருவரும் தத்தம் விளை நிலங்களில் பயிர் செழிக்குமென்றெண்ணிப் புதைத்தலும் வழக்கமன்றோ. ஜகந்நாதமுதலிய ஸ்தலங்களில் இரதோச்சவகாலங்களில் முத்தி வெறிகொண்ட பித்தர்கள் ஓடித் தேர்ச்சக்கரங்களில் விழுந்து நசுக்குண்டு பதைபதைத்து உயிர் விடுவதும் மோக்ஷப்பேய்பற்றிய மூர்க்கத்துவமன்றோ! சில காலங்களுக்கு முன்னும் செடிலாடல முதலிய வழக்கங்களையும், அதனால் அனேகர் ‘அம்மன் குறையால்’ விழுந்திறந்தமையையும் அரசாங்கத்தார் கண்டு தடைசெய்து விட்டமையையுங் கண்ணாரக் கண்டிருக்கின்றோமல்லவா? இன்னும் இத்தகைய கோர கிருத்தியங்கள் அளவற்றன உண்டே: இவை மானுஷீகத்துவமா மிருகத்துவமா? இவற்றையெல்லாம் அக்காலங்களிலுள்ளவர்களும் அரசர்களும் பராமரித்துவந்தார்களன்றோ: இவற்றையெல்லாம் நினைக்கவுங்கோரமாகவிருக்கின்றதே: இவை பிறநாட்டவர்க்கு எவ்வாறிருக்கும். இதனை நாமெல்லோரும் சிந்தித்தல்வேண்டும். இன்னொருகால் மானுஷீகத்துவமின்னதென நன்குவிளக்குவாம்.

—o—

வாதப்பிரதிவாதம்.

“பொருவிலருணெறிவாழ்க புணைநெறிகள் மிகவாழ்கவணாவிறிருத்தொண்டரணி வளர்கதிருத்தொண்டரணி”

நீவிரளித்தவிடையின் திறத்தைப் பனுவற்பயனுணரறிஞர்க்கெடுத்துரைப்பாம்.

க-வது. மனிதரது ஏற்பாடுகளாகிய மதங்களில் நன்மைதீமைக ளிரண்டுமுள.

உ-வது குற்றத்தைநீக்கிக் குணத்தைக் கொள்வது மானுஷீகம்.

ஆகிய இவ்விரண்டு சட்டுரைகளினின்றும், தங்கொள்கையினையே நிலைநாட்டுவான்கருதி உமிக்குற்றிக் கைவருந்தும் பொய்ப்புலவரல்லாத மெய்ப்புலவர் மனிதரேற்பாடுகளாகிய மதங்களிலுள்ள தீமைகளை யொழித்து நன்மையினை நுகரல் மானுஷீகமென்னுந் தீர்ப்பைத் தலைமிசைக்கொள்வ ரென்பதற் கையமென்னுளது ? இதனைவிடுத்து, குற்றங்கள் நீக்கிக்கொள்ளக்கூடிய மதங்களுண்டு என்னும் வாய்மை மேலையவற்றினின்று முதிக்கின்றதென்று வாய்மதம் பேசுகின்றது விந்தையினும் விந்தை! (a) இத்தகுதிய நிபுணத்தாலன்றோ பாமரரைமருட்டிப் பெருமைபெறுதல்! நுமது மொழியாலேயே குற்றங்களை நீக்கிக்கொள்ளக்கூடிய மதங்கணிலைபெற்றமையாற் குற்றங்களை யொழித்து மதங்களையு மவற்றின் துணியாயிலங்குந் தெய்வங்களையு மனுசரியாதிருப்பது எதனைநாடி ? நீர் கழறுமாறு யாம் சிவமாதியதெய்வங்களையே நிலைபெறச் செய்தோமில்லை. எம்மதமாயினும் எத்தேவாயினும் நன்மையினைப்பயப்பனவாயின் அவை யெமக்குச் சம்மதமேயென்றுணர்க. (b)

யாம் எழுதிய நிருபத்திலேயே “ஏனைப்பறிதலையவணாச் சைவவிதத்திறலொழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப்பற்றிச் சிதைத் திடர்செய்தேயிட்டார் திரிதலைக் கழுக்கோறன்னில்” என்னுந் திருவாக்கினுக்குத் தக்க சமாதானங்கூறியும் நுங்கொள்கை யெம்விடையின் வாய்மையினை யூகிக்கவொட்டாது நுங்கண்ணை மறைத்தது விந்தை! விந்தை! மறக்கருணையினிலக்கணமுமக்குப் புலப்படாமை தருக்கசாஸ்திர நிபுணத்துவத்தின்,

பயன்போலும். கருணை, அறக்கருணையென்றும், மறக்கருணையென்று மிருவகைத்து. ஓராசிரியன் தன்மாட்டு, கல்வி பயிலா நிற்கும் வித்தியார்த்தி யொருவனைத் தண்டித்தல் அவனது நன்மைக்கன்றோ? அற்றேலது கருணையின் காரியமன்றோ? அற்றேலது மறக்கருணையென்று தெள்ளறிவுடையார் சிரக்கம்பஞ்செய்யாரா? ஆதலின் அவ்வாசிரியன் நும்போலியரது தூஷணைக்கிலக்காதன் முறையன்றே. தத்வத்தாகவே, பரமாசிரியரா யவதரித்த திருஞானசம்பந்தரை வழிபட்டொழுகி யுய்த சைவர்கள், மென்மேலும் பாதகங்களை யிழைத்துச் சகோதரவாஞ்சையின்றி யுன்மத்தரா யுயிர்வாழ்ந்து வந்த சமணரைத் திரிதலைக்கழுக்கோறன்னி லேறிட்டுத்தண்டித்தது இரக்கமின்மையின்பயனோ? உரைமின். ஆவா நீரென்செய்வீர் 'தீவினைக்கம்மியனால் வாய்பூட்டிடப்படின்'? (c)

"மாநிலங்காவலனாவான்மன்னுயிர்காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன்பரிசனத்தால்
ஊனமிகுபகைத்திறத்தாற், கள்வரா லுயிர்தம்மால்
ஆனபயமைந்துந்தீர்த் தறங்காப்பானல்லனோ"

அறங்காப்பானாகிய மன்னவன் றன்னின்னுயிர்போன்ற குடிகளைத் துஷ்டநிக்கிரஹஞ்செய்து ஓம்புதல்மரபன்றோ? அற்றேல், அன்னோன் கருணைக்குப் பழுது வந்தமையை யெத்துணையுங் காண்டிலம். ஏனெனின், துஷ்டநிக்கிரஹகாரியம் மறக்கருணையின் பயனேயாமாதலின்.

நீவிர்மொழியுமாறு "கழுவேற்றியபடலம்" எனப் பிறவினையி லிருத்தலின், ஆளுடைய வரசுகளாற் சமணர் கழுவேற்றப்பட்டனர் என்று பொருள்கொண்டது குழறலன்று. கிரந்தகர்த்தராயிலங்கும் பரஞ்சோதிவள்ளல், அக்காலத்துள்ள சைவர்கட்கோரணிகலமாய் நிலவிய ஆளுடைய பிள்ளையாரால் சமணர்கள் கழுவேற்றப்பட்டனர் என்று தலைமைநோக்கிக் கூறியுளார். அடியில் வரும் பாசுரத்தானுங் கண்டுதெளிக.

"ஞானமாமதநீர்சோர் ஞானசம்பந்தரென்னு
மானமாயானைவந்து கடம்பமாவனத்திற்றுன்னு [ணீ
மூனமாஞ்சமணரென்னுந்தருக்களையொடித்து வெண்
ரூனமாப்பூழியள்ளித்தூற்றியதவனியெங்கும்"

இங்ஙனந் தலைவர்மீது சாட்டிச்சொல்லல், சரித்திரக்காரரது மரபாமாதலான்.

"ஓரமணரொழியாமேகழுவிலேற்றி" என்னு மூதுரைக்கும், "மதத்தின்மானமிக்கார் தாங்களேவலியவேறிப்பதைத்திடவிருந்தார்" என்னுந் திருவாக்கினுக்கு முரண்படுதலின்மைகாண்க. ஆதலின் பரஞ்சோதி முனிவரது வாக்கின்மீது குற்றஞ்சாட்டியது ஆபாசத்தினுமாபாசம்: (d)

"நாழிநவைதீருலகமாக நளினத்து நீதந்தநான்முகனார்தாமே, ஊழிபலபலவு நின்றளந்தாலொன்று மூலவாப்பெருங்குணத்த ருத்தமனேமேனாள், தாழிதனையாகத்தண்டயிர்நீராகத் தடவரையே மத்தாகத்தாமரைக்கை நோவ, ஆழிகடைந் தமுதமெங்களுக்கே யீந்தாயவுணர்கடா மூனக்கடிமையல்லாமையுண்டோ" என்னுந்திருப்பாசுரத்தில் விண்டுவே, தன் தாமரைக்கை நோவ ஆழிகடைந்ததாகச் சொல்லியிருப்பது சரித்திர பூர்வகத்துக்குப் பரஸ்பரவிரோதமாயிருக்கின்றதன்றோ? சுரரும் அசுரருமே பாற்கடலைக்கடைந்தபிறகன்றோ, எம்பெருமான் அமரர்க்கமுதளித்தது? இங்குந்தலைமை நோக்கி, விண்டுவே கைநோவக்கடைந் தளித்ததாகக் கூறியுளார். கிரந்த கர்த்தா என்றுணர்ந் துய்க. எத்தேயத்தோர்க்கு மிஃதோர் மரபென்பது பளிங்கற்று.

"வாதுசெய்தழிக்கத் திருவுள்ளமே" என்னுந்தேவாரப்பதிகத்தில் "அழிக்க" என்பது "கொல்ல" என்று பொருள்படுதலைக்கண்டிலம். அங்ஙனமே பொருள்படுமென்று சாதிப்பீராயின், யாம் பண்டே யளித்த சமாதான் மிதனுக்குமொக்கும். மேற்குறித்த நியாயங்களும் சமாதானங்களு நும்பேரறிவுக்கிலக்காகாவிடின்யாமென் செய்குவதாம்? சமணரைப்பற்றிய இவ்விஷயம் முற்றுங் குற்றமென நுமது மதிக்குப் புலப்படின், "குற்றதனைநீக்கிக் குணத்தைக்கொள்வது" மரபாதலின், இப்போலிக்குற்றத்தை யொழித்து எஞ்சிய குணதனையாயினுங் கொண்டுய்மின்.

Balasundram Mudelliar.

(a) "காணாதுகண்ட கரிச்சட்டியும் வீணா வீணர்க்குவெகுவிந்தையே" என்னும் பழமொழிக்கிணங்க, 'குற்றங்கள நீக்கிக்கொள்ளக்கூடிய மதங்களுண்டு' என்னும் எமது நியமனம், விந்தையிலும் விந்தையாயின், அதை முன்னரோயுணராமை யார் குற்றம்?

(b) நீவிர் சிவமாதி தெய்வங்களை நிலைபெறச்செய்தல் நுந்திறமன்றே, நிழலைப்புதைக்க நும்மாலாகுமா? பிரபஞ்சத்திற்கு அன்னியமாய் ஓர் பரமாணுவையேனும் நிலைநாட்டவல்லீரா? இவ்வாதத்தில் அருவதிக்கப்பட்ட நும்மதமே மனோரதமாகும்போது தேவை நிறுத்த திடமேது?

(c) உமது உடன்பாடாகிய தீவினைக்கம்மியன்எமது விசாரசன்னிதானத்தில் நாஸ்தியாய் விடவேண்டியவனாதலான், யாமிருக்குந் திசையையுந் நோக்குந்திறனுடையனல்லனே: அவனிட்ட வாய்பூட்டு நும்வாய்க்கென்றும் நம்வாய்க்கென்றும் அடியில் நன்கு விளங்கும்—"சைவர் சமணுதிகளைக் கொலைபுரிந்தனர்" என்று நாம்சொல்லியதற்கு மாறாய்நீவிர், "சமணர்தாமே கழுவேறினர்" என்று கூறியதுண்டா, இல்லையா? பின்னர் நும்மவனாகிய தீவினைக்கம்மியனுடைய தொழிற்றிறத்தாலோ மற்றியாதாலோ "ஏனையசமணரைச் சைவர்பற்றிப்பற்றிச் சிதைத்து கழுவேற்றினார்" என்று நஞ்சொல்லைச் சிரமிசைகொண்டு நுஞ்சொல்லையே மறுத்ததும் உண்டா? இல்லையா? எவ்வாறு சுற்றிச்சுற்றியோடினும் நமது வழிக்கே வரவேண்டிய உமக்கு வாயேன்! வாதமேன்!! முழுப்பூசினிக்காயைச் சோற்றோடுமறைத்தால் பாதிகாய் வெளியே தெரியாதா? சைவர் அங்ஙனம் கொலைபுரிந்தது மறக்கருணையென்றீர். மறக்கருணையாவது என்னவெனின் ஓராசிரியன் தன் மாணாக்கனைப் பிழைகண்டு அவனங்ஙனம் மறுபடி புரியாதிருக்க தண்டித்தல்,என்றீர். தண்டனை-பழிவாங்குதற்பொருட்டு செய்யுந் தண்டனையென்றும், பிறன் புரிந்த குற்றத்தை அவன் அங்ஙனம் திரும்பவும் புரியாதிருக்கும்படி கருணைகூர்ந்து தண்டிக்கும் தண்டனையென்றும் இருவகைப்படும். இவற்றுள் முன்னையது ராகத்துவேஷங் காரணமாகக் கொலைபுரிதலும், பின்னையது கருணைகாரணமாக கொலையல்லாத சொற்ப சிக்ஷை புரிதலுமாம். ஆகையால் முன்னையது மறக்கருணையும் பின்னையது அறக்கருணையுமாம். சைவர் சமணுதிகளைப்புரிந்தது கொலையேயாதலால் அது மறக்கருணையேயல்லாமல் அறக்கருணை அன்று அன்று. சமணர் சைவமடத்தில் கொள்ளி வைத்ததையும், புரோடெஸ்டாண்டு உரோமன் கிறீஸ்தவர்களும் மகம்மதியரும் ஒருவரையொருவர் கொலைபுரிந்ததும் அறக்கருணையென்றால் நீர் ஒப்புவீரா? சங்கிலே வார்த்தால்தீர்த்தம் சொம்பிலேவார்த்தால் தண்ணீரா?

(d) மதங்களனைத்தும் மனிதரோற்பாடென்று ஒப்புக்கொண்டு, அம்மதத்திலொன்றாகிய சைவத்தினை அபிமானித்தொழுகிய ஒருவகையாரை நியாயஞ்சொல்லாமலே அரசருக்கொப்பிட்டு அன்னோர் செய்கை புனிதமுடைத்தெனப் புதுமைகாட்டுவது ஆபாசத்தினும் ஆபாசம். சமணர் கழுவேறியபடலத்தை சமணரைக் கழுவேற்றியபடலமென்று தலைப்பெயர் சூட்டியது. தலைமைபத்தியமரபெனின், நாயை எவ்விடத்தடித்தாலுங் காலைத்தூக்கிக்கொள்வதுபோல் யார் எதுசெய்தாலும் தலைவராயுள்ள சம்பந்தர் தலையில் வந்து அவர் செய்தாரென்று விடிவது சைவமரபுபோலும்? புனலில் ஏடெதிரேற்றியதும் காயாத ஆண்பனையில் கனி[illegible] ற்றியதும், புத்தன் தலையி லிடியேற்றியதும் இ[illegible] இவைபோன்ற அற்புதங்களனைத்தும் ய[illegible] செய்துவிட்டு கடையில் தலைவராயுள்[illegible]

வந்துவிடிந்ததுபோலும்? ஆ! ஆ! உம்மைப்போலும் இன்னும் இரண்டொரு சைவவாதிக ளேற்படின் சைவம் நன்றாய் விளங்கும் விளங்கும். புறச் சமயிகளாகிய சமணர் தாமே கழுவேறியதை சைவர் கழுவேற்றினார்களென்று பெருமை பாராட்டிவருவது சிவபுராணிகர் மரபாயின், எங்தெந்த சமயத்தவர் என்னென்ன அற்புதங்கள் செய்தார்களோ அவையனைத்தும் சைவசமயாசாரியர்கள் செய்தார்களென்று பெருமை பற்றிப் புராணங்கட்டினார்களென்பதற்கு வேறு புறச்சாக்ஷியும் வேண்டுமோ? குருடன் வழியறிந்து செல்லானேயென்றால், அவனேறி வேறொரு குருடனை வழிகாட்டவிடுவதுபோல் கழுவேற்றிய வென்பதை மெய்ப்பிக்க 'நாழிநவைதிர்' என்னும் இன்னொரு பொய்க்கதையைக் குமிக்கும் பாட்டைக் காட்டின் மெய்யாமோ?

பகுத்தறிவும் நடுநிலையுமுடைய விவேகிகாள்! நாம் மதங்களனைத்தும் மனித சிருஷ்டியேயென்று கூறியதை இவர் அநுவதித்து அது சத்தியமேயென்று ஒப்புக்கொண்டார். ஆகையால் அதுவிஷயத்தில் இவருக்கும் நமக்கும் அபிப்பிராய பேதமில்லாமையால் வாதமுமில்லை. பின்னர் மதங்கள் பலவற்றில் நன்மை தீமைகளுளவென்று, கிரீஸ்தவம் மகமதியம் சைவம் முதலிய மதங்களின் குற்றங்களைக் காட்டினும். இதிலும் இவர் பெரும்பான்மையும் ஒப்புக்கொண்டு, சைவர் புரிந்தது குற்றமன்று என்றும், நாம் சுட்டிக்காட்டாத சம்பந்தரைத் தாமே சுட்டி, அவர் சமணரைக் கழுவேற்றிலரொன்றும், சமணர் தாமே கழு வலியவேறினார்களென்றும், "ஏனைப் பறிதலையவரை" என்னும் பாட்டின்படி சைவரோ ஏற்றினார்களென்றும் அவர் அவ்வாறு செய்தது மறக்கருணையென்றும். முன்னுக்குப்பின் மலைவுபடக் கூறி "சைவர் சமணரைக் கொலைபுரிந்தார்" என்னும் எமது வாய்ச்சொல்லிற்கு இவரே பிரமாணமும் எடுத்துக் கொடுத்துவிட்டார். இவர் இங்ஙனம் செய்தமை கொல்லவந்த எதிரி கையில் வாளைக்கொடுத்துவிட்டு கழுத்தையும் அவ்வாளில்தானே மோதிக்கொண்ட கதையாய் முடிந்தது. சைவர் கழுவேற்றினார்களே யன்றி சம்பந்தர் கழுவேற்றவில்லையென்றால், சம்பந்தர் சைவரன்றோ? சம்பந்தரும் செய்தாரென்று சைவபுராண பிரமாணங்களை முன்னர்காட்டியும் உள்ளோம்; இன்னும் வேண்டுமட்டுங் காட்டுவோம். செய்கையைநோக்கி குற்றம்பாரிக்கப்பட்ட இந்த சந்தர்ப்பத்தில் மறக்கருணையென்று எண்ணத்தைக்காட்டி வாதிக்கவேண்டிய ஆவசியகமின்றே: ஒருவனைக் கொன்றவனைக் கோர்ட்டார் தூக்கிவிடுவார்களேயல்லாமல், கொல்லும்படி எண்ணினவனைத் தூக்கார்களே: கிறீஸ்தவர் மகமதியர் முதலியோரும் தம்மவர் புறச்சமையிகளைக் கொன்றது மறக்கருணையே யென்கிறார்கள்; அப்போது குற்றமுடையசமயம் எது? ஆடறுப்பவனும் நான்செய்யுந் தொழில் மறக்கருணையேயென்று சொல்லானோ? ஆகையால் உம்முடைய அபிமதம் குற்றமுடையதே. ஒடிந்தகாலுக்கு எவ்வளவு ஒட்டுவைத்தாலும் ஊனம் ஊனமே. இவ்வளவில் வீண்வாதத்தை ஒழித்துவிடல் மரியாதை.

———o———

வர்த்தமானசங்கிரகம்.

ஜூபிலிஉற்சவம்.—சென்னையில ஜூபிலி ஞாபகார்த்தமாய் நடத்தப்படும் வேடிக்கைக்கென்றும், ஏற்படுத்தவேண்டிய சாலைக்கென்றும், லண்டன் பட்டணத்தில் கட்டப்படும் கட்டடத்திற்கென்றும், மூன்று பிரிவு ஏற்படுத்தி, அவரவரிஷ்டப்படி அததற்கென்று கையொப்பஞ்செய்யலாமெனத் தீர்மானமுண்டாயிருக்கிறது. அன்றியும், துரைத்தனத்தாருடைய உத்தர ...ின்படி பிபர்வரிமீ 16உ உற்சவம் கொண்டாடுவதுமல்லா ... சரியானதினமாகிய ஜூன்மீ 20உயிலும் மறுபடி கொ... வேண்டுமென்று யோசனையுண்டாயிருக்கிறது.

...பாத் நபாபு அவர்கள் அவ்விடத்திலே மருத்துவத் ...சாலை ஏற்படுத்தி, ஜூபிலி சம்பவ ஞாபகத்தைநிலை நிறுத்த உத்தேசித்திருக்கிறார்.—பாட்னாவில் அதற்காக கைத்தொழிற்பயிலுஞ்சாலை ஏற்படுத்தப்படுமாம். அனுகூலமானகாரியமே.

சென்னை ரிஜிஸ்திரேஷன் இலாகா.—1876-77வரு முதல் ரிஜிஸ்தர்செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளின் சங்கியை விர்த்தியாய்க்கொண்டுவருகிறது. அந்தவருஷத்தியசங்கியை 251,405. 1885-86 வருஷத்தில் 584,224. 1876-77வருஷத்தில வரவு தொகை ரூ 3,92,193. 1885-86வரு வரவு ரூ 8,38, 455. செலவு ரூ 6,59, 850: இந்த வருஷம் கட்டடவிஷயத்தில் செலவு குறைந்ததினாலே இதற்கு முந்திய வருஷத்தைப்பார்க்கிலும் செலவு குறைவுகான். ஆதலால் சர்க்காருக்கு மிகுதி வரும்படி ரூ 1,78. 605. கர்னூல், திருச்சினாப்பள்ளி, வட ஆற்காடு, செங்கற்பட்டு, இந்த ஜில்லாக்களிலே ரிஜிஸ்திரேஷன் அதிகம். நீலகிரியிலே பொன்கனி சோதனைவேலை குறைவுபட்டதினாலும் காப்பிபயிர் பலிதமாகாமையாலும் ரிஜிஸ்திரேஷன அதிக குறைவுபட்டது. மற்ற ஜில்லாக்களிலேமிதம்.

சென்னை ஸ்மால்காஸ்கோர்ட்டு.—இந்தக் கோர்ட்டில் விடுமுறைநாள்கள் கல்கத்தாவிலும் பொம்பாயிலும் அப்படிப்பட்ட கோர்ட்டுகளிலிருப்பதைப்பார்க்கிலும் அதிகமாயிருக்கிறதென்று இந்தியா கவரன்மெண்டார் நினைக்கிறபடியால், அந்த நாள்களைக் குறைக்கவேண்டுமென்று பிரேரேபித்து, கோர்ட்டுஜட்ஜிகள் ஹைகோர்ட்டு அட்டரணிகளுக்கும் வக்கீல்களுக்கும் சர்க்கியுலர் அனுப்பினார்கள். அவர்கள் அந்தப்பிரேரேபணையை அங்கிகரித்தார்கள்.

யானைகள்பிடிப்பு.—டேப்ரீ, ஜனவரி 17உ. இங்கிலீஷ்மான் பத்திரிகைக்கு கடிதநேயர்எழுதியது—கவரன்மெண்டு யானைச்சாலை சூபரின்டெண்டாண்டு சாண்டர்சன் துரையானவர் வெகு நேர்மையாக உபாயஞ் செய்கிற தமது சாமர்த்தியத்துக்குத் தக்கபடி ஜனவரிமீ 14உ ஒரு பெருத்த யானைக் கூட்டத்தைப்பிடிப்பதில் சித்தியடைந்தார். அது 140 யானைகளுக்குக் குறைவில்லை. எப்போதாவது இவ்வளவு பிடிபட்டதாக ரிகார்டில் இல்லை. அவை சுமார் லட்சம் ரூபா மதிப்புள்ளவை. பிடிபட்ட இடம் கேரோமலைகளின் பிரதான ஸ்தானமாகிய தூராவிற்கு ஆறுமயல் தூரத்திலேதான். யானைகளை பிடிப்பதற்கு பலமான அடைப்பு போடப்பட்டது. அதை வலுவுள்ள அத்தனையானைகள் நெக்கித்தள்ளிவிடாதபடி அதற்குப்பின்னால் உறுதியானமாதிரி மரங்கள் முட்டாக நாட்டப்பட்டன. இந்த யானைகளைப் பழகின யானைகளோடு புணைக்கத்தொடங்குவதற்குமுன்னமே அவற்றுள் சிற்சிலவாய் அப்புறப்படுத்துவதற்காக உள்ளே விடும்படி வேறே அடைப்பு தயார் செய்யப்பட்டிருந்தது. யானைகளை ஓட்டிக்கொண்டிருக்கையில், ஒன்று விடுபட்டுத் தப்பித்துக்கொண்டபோது வேட்டைக்காரர்களில் ஒருவனைக் கொன்றுவிட்டது.

இடையூறு.—கல்கத்தாவில் ஒருவாரத்துக்குமுன்னமே ஒரு பயணக்காரர் தோணியிலே பத்துகூலியாள்கள் ஏறினார்கள். அவர்களிலிருவர் ஒருவன் பின்னொருவனாகக் கயிற்றேணியின் மேலேறுகையில் முன்னவன் தவறிப் பின்னவன்பேரில்விழ, அவ்விருவரும் தண்ணீரில் விழுந்துவிட்டார்கள்; மேலுக்குக் கிளம்பவேயில்லை. அவர்கள் தகப்பனும் பிள்ளையும்.—அதே தினத்தில் ஒரு சுதேசஸ்திரீ நெருப்பண்டை குளிர்காய்ந்துகொண்டிருக்கையில், துணியில் தீப்பட்டு, மிகுதியாய்வெந்து, அன்றுசாயங்காலம் ஆசுபத்திரியில் இறந்துபோனாள். **சாக்கிரதை, சாக்கிரதை!**

ஜூபிலி வால்நட்சத்திரம்.—கார்டோபாவில்நட்சத்திரகணிதசாலை டைரெக்டர் புது வால்நட்சத்திரமொன்று கண்டறிந்தனராம். அது மிகப்பிரகாசமாயிருக்குமாம்.

பர்மா போலீஸ் அலுவலுக்காக பம்பாய்ராச்சியத்தில் ஆயிரம்பேரைச் சேர்க்கவேண்டியதிருக்கிறது. மேற்புற இந்தியாவிலே சேர்க்கவேண்டியிருந்த மூவாயிரம்பேரில் இதுவரையிலே 1800 பேர்சேர்த்தாயிற்று. ஆள்கள் விடாதுவந்துகொண்டிருக்கிறார்கள்.—ஸர் பிரிடிரிக் ராபர்ட்ஸ் அவர்களும் ஜனரல் ஒயிட் அவர்களும் ஜனவரிமீ 25உ. கெம்பு கனிப் பிரதேசத்திலிருந்து மந்தாலே வந்துசேர்ந்தார்கள். அவர்கள் போனகாரியம் திருப்திகரமாகவேயிருந்தது. தேசமுழுவதும் அமைதியாயிருக்கிறது. ஆரோக்கியத்துக்கடுத்த சீர்திருத்தஞ்செய்யப்பட்டுவருகிறது. அந்தத்துச்குடியிலுள்ள சேனையில் 150 பேரை மாத்திரம் நிறுத்திக்கொண்டு மற்றவர்களை அப்புறப்படுத்த உத்தேசித்திருக்கிறது.

கங்கிராவாலி என்னும் கணவாயிலுள்ள பாலம்பூரிலிருந்து ஒருவர் எழுதியதாவது:—ஜனவரிமீ 19உ காலமே $12\frac{2}{3}$ மணிக்கு அவ்விடத்திலே பூமியதிர்ச்சியுண்டாயது. சென்ற இரண்டு வாரத்திலே விடாது அபரிமிதமான மழைபெய்தது. மூன்று தருணங்களில் பனிபெய்தது. ஒரு நாள் இரவிலே இரண்டங்குல மழை,

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.